<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>O.S. No.104/2024</u>

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ஆம் நாள் வா.சா.1 சாட்சி திருமதி.செல்லம்மாள் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.செல்லம்மாள் | தொழில் | : |
| த/பெ | : குப்புசாமி | கிராமம் | : குத்தியாலத்தூர் |
| வயது | : | தாலுக்கா | : சத்தியமங்கலம் |

<u>வா.சா.1 : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கைரேகை என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

06.08.2010ம் தேதியிட்ட 1ம் வாதியின் கணவர் குப்புசாமி பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்று நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 21.12.2012ம் தேதியிட்ட குப்புசாமியின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், குப்புசாமியின் வாரிசு சான்றிதழ் சான்று நகல் வா.சா.ஆ.3 ஆகவும், தாவா சொத்தின் பட்டா கணினி

நகல் வா.சா.ஆ.4 ஆகவும், தாவா சொத்தின் அ பதிவேடு கணினி நகல் வா.சா.ஆ.5 ஆகவும், தாவா சொத்தின் அரசு வழிகாட்டி மதிப்பு கணினி நகல் வா.சா.ஆ.6 ஆகவும், வாதிகளின் ஆதார் அடையாள அட்டை நகல் (எண்ணிக்கை 5) வா.சா.ஆ.7 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.